2018 ஜூன் 25]

என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பரிசீலிக்கப்படும் என்று கூறியதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

208—

தியாகிகளுக்கான ஓய்வூதியம்

***26017— திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகைக்கு இணையாக தமிழ் மொழிப்போர் தியாகிகளுக்கும் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு, 1960 ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்தாலும், 1984 ஆம் வருடத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் முதலில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 1984 ஆம் ஆண்டிற்குப்பின், அதற்கடுத்து 1997 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது சட்டரீதியான சிக்கல் எழுந்தது. உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டு, இவர்களுக்கு ஓய்வூதியம் தரக் கூடாது என்று ஓர் உத்தரவு வாங்கியிருந்தார்கள். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், இதை உருமாற்றி, அதாவது இந்தி எதிர்ப்புத் தியாகி என்று கொடுத்தால்தான் தவறு என்பதால் அதை, தமிழறிஞர்கள் என்ற பெயரில் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போதைக்கு உயிருடன் இருக்கும் 401 நபர்கள் இந்த ஓய்வூதியத்தைப்

பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். மரபு உரிமையர் 239 நபர்கள் தற்போது இந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தற்போது நாம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்தத் தொகையை மானியக் கோரிக்கையின்போது உயர்த்தி வழங்குவதற்கு முடிவெடுத்திருக்கிறோம். 3 categories–ல் தமிழுக்காக ஓய்வூதியம் தருவது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவையாவன: 1) எல்லைக் காவலர்கள், 2) தமிழறிஞர்கள், அதாவது இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்கள், 3) அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள். இந்த முறை இம்மூன்று categories–க்கும் உயர்த்தி வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். தற்போது நாம் தமிழறிஞர்கள் என்ற பெயரில்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கு ரூ.3,000/– என இருந்தது, தற்போது ரூ.3,500/– ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ரூ.4,000/– ரூபாயாக இருந்த எல்லைக் காவலர்களுக்கு, ரூ.4,500/– ஆக உயர்த்தி அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோல், அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகையை ரூ.100/–லிருந்து, ரூ.500/– ஆக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டிருக்கிறோம். அது தவிர, இம்மூன்று categories–க்கும் கட்டணம் இல்லாப் பேருந்து அட்டை வழங்கியது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், இன்றைக்கு 3,469 நபர்களுக்கு இந்த 3 categories–ல் ஒன்றிற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதை சுதந்திரப் போராட்ட வீரர்களோடு compare செய்து நாம் உயர்த்தவில்லை. ஆனால், இதுவரையில் இல்லாத அளவிற்கு, இந்த வருடம் அதிகமாக அவர்களுக்கு ரூ.500/– உதவித் தொகையிலும், ரூ.400/– மற்றவற்றிலும் சேர்த்து, ரூ.900/– இந்த வருடத்திலிருந்து அவர்களுக்கு அதிகமாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், மூன்று வகைகளாகப் பிரித்து ஓய்வூதியம்

2018 ஜூன் 25]

வழங்கப்படுகிறது. ஓய்வூதியம் வழங்குவதில் பிரச்சினை வந்தபோது, 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ் மொழிக் காவலர்களுக்கு, மொழிப் போர் தியாகிகளுக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குவதற்கான முயற்சியை எடுத்து, வழங்கினார்கள். இப்போது மத்திய அரசின் சார்பிலே சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாதந்தோறும் ரூ.23,500/– ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மருத்துவப் படியாக ரூ.500/– வழங்கப்படுகிறது. சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு தமிழக அரசின் சார்பிலே மாதந்தோறும் ரூ.13,000/– ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மருத்துவப் படியாக ரூ.500/– வழங்கப்படுகிறது. ஆக, மத்திய, மாநில அரசுகளின் சார்பிலே, ஓய்வூதியம் மற்றும் மருத்துவப் படி இரண்டும் சேர்த்து மொத்தம் ரூ.37,000/– வழங்கப்படுகிறது. எனவே, மாநில அரசு வழங்குகிற ரூ.13,000/–யுடன், மருத்துவப் படியான ரூ.500/–ம் சேர்த்து ரூ.13,500/–ஆக தமிழ் மொழிப் போர் தியாகிகளுக்கு வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதை அரசு வழங்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த வித்தியாசம் அதிகமாகத்தான் இருக்கிறது. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கண்டிப்பாகக் கொண்டு செல்லப்படும். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசாங்கம் மற்றும் தமிழக அரசாங்கம் இரண்டும் சேர்ந்து ஓய்வூதியம் மற்றும் மருத்துவப் படியாக இன்றைய தேதியில் சற்றொப்ப ரூ.37,000/– வழங்குகின்றன.

சட்டச் சிக்கல்கள் இருந்ததால், நம்முடைய மாநில அரசால் இந்த ஓய்வூதியத் தொகையை இதற்குமேல் உயர்த்த முடியவில்லை. ஒரு வருடத்திற்கு அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 50 பேருக்கு ஓய்வூதியம் வழங்கிக் கொண்டிருந்தோம். அதை இந்த முறை 100 ஆக, இரு மடங்காக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையையும் அவரிடம் எடுத்துச் சென்று,

இதற்கு ஒரு நல்ல முடிவைக் கண்டறிய முடியும் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போர் தியாகிகளுக்கு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படுவதைப்போல் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். மொழிப் போர் தியாகிகளுக்கு, எல்லைக் காவலர்களுக்கு, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு, எல்லோருக்குமே சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படுவதைப்போல, ரூ.13,500/– வழங்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கண்டிப்பாக எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நீங்கள் இதில் பார்க்கவேண்டிய விஷயம் என்னவென்றால், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகையிலே மூன்றிலே இரண்டு பங்கு தொகையை மத்திய அரசாங்கம் இதுவரையிலும் தந்துகொண்டிருக்கிறது.

நான் குறிப்பிட்ட இந்த மூன்று வகைகளுக்கும் மாநில அரசு முழுக்க முழுக்க தனது நிதியிலிருந்து செலவு செய்துகொண்டிருக்கிறது. தமிழுக்காக எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் தமிழக அரசாங்கம், அண்ணன் மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களின் அரசு, இந்தக் கோரிக்கையையும் வெகு விரைவில் கனிவுடன் பரிசீலிக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

அதேநேரத்திலே, இந்த முறை மட்டுமே, தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் அறிஞர்களுக்காக செலவு செய்திருக்கிற நிதி, இதுவரை இல்லாத அளவிற்கு, வரலாறு காணாத அளவிற்கு, மானியக்

2018 ஜூன் 25]

கோரிக்கையில் அமைச்சரின் அறிவிப்போடு சேர்த்து பார்த்தீர்கள் என்றால், இரு மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஐந்து வருடங்களில் தமிழ் வளர்ச்சிக்காக மொத்தமே ரூபாய் 117 கோடிதான் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஒரு வருடத்திலே மட்டும் ரூபாய் 90 கோடிக்குமேல் தமிழ் வளர்ச்சிக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் 1–11–1956 ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து பிரிந்து தாய்த் தமிழகத்தோடு சேர்ந்தது. நீண்டகாலப் போராட்டத்திற்குப் பிறகு, பல்வேறு வீரர்களின் உயிர்களை இழந்து, தியாகங்களைச் செய்து, போராட்டங்கள் மூலம்தான் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. ஆனால், அதற்காகப் போராடிய போராளிகள், தியாகப் பெருமக்கள், இறுதி போராட்டத் தியாகிகள் பலர், தியாகிகள் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்தும் இதுவரை கிடைக்கவில்லை; மாத ஓய்வூதியம் கிடைக்கவில்லை. சிலருக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது. அதுவும் குறைந்த அளவே கிடைக்கிறது. ஆகவே, இன்னும் போராளிகளாகவே ஓய்வூதியத்திற்காகப் போராடி. தங்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்ட பல தியாகிகள், ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்தும் அந்த வரிசையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைத்தால் நிச்சயமாக நன்றாக இருக்கும்.; தமிழக அரசுக்குப் பாராட்டும் கிடைக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்

அவர்களின் பிறந்த நாளான இன்று இந்தக் கேள்வியை எழுப்பியமைக்கு நன்றி.

எல்லைக் காவலர்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள எல்லைக் காவலர்கள் 1982 பேருக்கு தமிழக அரசாங்கத்தின் மூலமாக இதுவரை ஓய்வூதியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லைக் காவலர்கள் 1098 பேர் உயிருடன் இருக்கிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய மரபு உரிமையர் 884 பேருக்கு இப்பொழுது கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எத்தனையோ வருடங்கள் ஆனதனால் delay ஏற்பட்டிருக்கிறது. கண்டிப்பாக எல்லாவிதத்திலும், தகுதி படைத்தவர்கள் இருக்கும்பட்சத்தில், 30 வருடங்கள், 40 வருடங்கள் ஆனால்கூட, revenue record–ஐப் பார்த்து check செய்வதற்கு கொஞ்சம் delay ஆகிறது. இருப்பினும், தகுதி படைத்த அனைவருக்குமே, இத்தனை வருடங்கள் ஆனாலும்கூட, கொடுப்பதற்கு தமிழக அரசாங்கம் ready ஆக இருக்கிறது என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

209—

திருமண மண்டபம்

***16327—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சியிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?